# ரசிகன் நாவலில் மனிதநேயச்சிந்தனைகள்

**மா. மகேஸ்வரி**
முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண் - 21212014022012
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி
தமிழாய்வு மையம், தூத்துக்குடி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அங்கீகாரம் பெற்றது
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா

**முனைவர் ர. செல்வலதா**
நெறியாளர் & உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை, தமிழாய்வு மையம்
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i3-July.6433

**ஆய்வுச் சுருக்கம்**

*இலக்கியங்கள் காலம் காட்டும் கண்ணாடி. இவை மனிதனை அடிப்படையாகக் கொண்டு மனிதனால் மனிதனுக்குப் படைக்கப்படுகிறது. மனிதன் தன்னலம், பொதுநலம் என இரண்டு நிலைகளில் வாழ்கிறான். தான் என்று எண்ணும்போது அது தன்னலமாகவும், பிற மனிதனின் நலன் விரும்பும்போது அது பொது நலமாகவும் கருதப்படுகிறது. அந்தவகையில் ரசிகன்' நாவலில் வெளிப்படும் மனிதநேயம் பற்றிய சிந்தனையை கதாபாத்திரத்தின் மூலம் எடுத்துரைக்கிறார் ஆசிரியர் ஆர். அபிலாஷ். மனிதன் தன்னோடு இருக்கும் சகமனிதர்களை மனிதர்களாப் பார்க்கும் பழக்கம் குறைந்துக் கொண்டு வருகிறது. இப்படிப்பட்ட சூழலில் நாவலாசிரியர் தன்னுடைய நாவலில் மனிதநேயத்தை எடுத்துக் கூறி சமூகமாற்றத்திற்கு விதையிடுகிறார். மனிதநேயம் பற்றிய சிந்தனையை ஆசிரியர் எவ்விதம் நாவலில் வெளிப்படுத்துகிறார் என்பதை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

## முன்னுரை

பழந்தமிழர்கள் தங்களுடைய வாழ்க்கையை இயற்கையோடும் மனிதநேயத்துடனும் வாழ்ந்தார்கள். மனிதனை மனிதனாக மதிக்கும் தன்மை, பிறஉயிர்களிடம் அன்பு பாராட்டுதல் ஆகிய குணங்களை எதிர்காலசந்ததியினருக்கு எடுத்துக்காட்டினர். பழந்தமிழர்களின் வாழ்க்கையில் இத்தகைய மனிதநேயம் மிகுந்து இருந்ததை இலக்கியங்கள் நமக்கு காட்டுகின்றது. தற்கால இலக்கியமான நாவலும் மனிதநேயத்தை பறைசாற்றுகின்றன. ரசிகன் நாவலில் வரும் சாதிக்கின் வாழ்க்கை முறையை கூறும் போது அவர்கள் விருந்தளிக்கும் பண்பு, பிறருக்காக இரங்கும் குணம், எவ்வுயிரையும் தன்னுயிர் போல் எண்ணும் குணம், ஈகை பண்பு போன்ற மனிதநேயம் எவ்வாறு நாவலில் வெளிப்படுகிறது என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

### மனிதநேயம்

மனிதன் சகமனிதர்களிடம் அன்பு காட்டுவதை மனிதநேயம் எனலாம். பிறர்துன்பத்தை தன்துன்பம் போல எண்ண வேண்டும். உயிரிரக்கப் பண்பு என்பது மனிதநேயத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. "உயிரிரக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல்" என்பது வள்ளலாரின் பொன்மொழி. அவர் அவ்வாறே வாழ்ந்து காட்டியுள்ளார்.

மனிதநேயத்தைப்பற்றி,

**"எல்லோரும் இன்புற்று இருக்க**
**நினைப்பதுவே**
**அல்லால்வேறொன்றும் அறியேன்**
**பராபரமே"[1]**

என்று தாயுமானவர் கூறுகிறார்.

**"ஏழைஎன்றும் அடிமையென்றும் எவனுமில்லை ஜாதியில்**
**இழிவு கொண்ட மனிதரென்று இந்தியாவில் இல்லையே":[2]**

ஏனப் பாரதியார் தன்னுடைய பாடல் மூலம் மனித நேய உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன.

அன்பு, பாசம், பற்று, ஈவு, இரக்கம், கருணை, பண்பு, சகோதரத்துவம், தாய்மை போன்றவைகள் மூலம் மக்களிடம் மனித நேயத்தை உணரமுடிகிறது. மனிதபிறவியை நேசித்து சாதி மதங்களுக்கு அப்பாற்பட்டு மனிதனோடு மனிதன் இணைந்து அன்பு செலுத்தி மகிழ்வோடு வாழ்வது மனிதநேயம். இன்றைய காலகட்டத்தில் மனிதநேயம், குறைந்து காணப்படுகிறது. இந்நிலைமாற வேண்டும்.

### விருந்தளிக்கும் பண்பு

"ரசிகன்" நாவலில் வரும் சாதிக்கின் நண்பன் வீட்டிற்கு வருகிறான். சாதிக்கின் குடும்பம் வறுமையில் வாடியபோதும், வீட்டிற்கு வந்த விருந்தினரை கவனிக்க தவறவில்லை. பசிக்கும் ஒரு உயிருக்கு உணவளிப்பது மிகச்சிறந்த மனிதநேயப் பண்பாகும். இதனை, நாவலில் வரும் சாதிக்கின் தங்கை பர்வீன் மூலம் ஆசிரியர் வெளிப்படுத்துகிறார்.

"பசிக்கா? கடிக்க என்ன வேணும்? என்று கேட்டுவிட்டு எழுந்து போனாள். ஒரு சின்ன பாத்திரத்தில் அவலை கருப்பட்டி, தேங்காய் துருவல் இட்டு நனைத்துப் பிசைந்து கொண்டு வந்தாள். தேங்காய் மற்றும் நனைந்த அவலின் வாசனை பசியைக் கிள்ளியது. வாங்கி மென்றுவிட்டு அவளுக்கும் நீட்டினேன். அவள் எழுந்து போய் தன்னுடைய கடுஞ் சாயாவைக் கொண்டுவந்து கருப்பட்டி துண்டு கடித்துக் குடித்தாள்"[3] *(ர.நா.ப.84)*

சாதிக்கின் குடும்பச்சூழலை வறுமை நிலையில் காட்டிய ஆசிரியர், அதே வேளையில் அவர்கள்மனிதநேயத்தோடும் இருந்தார்கள் என்பதைக் காட்டத் தவறவில்லை.

பழந்தமிழரிடம் காணப்பட்ட ஒப்பற்ற மனிதநேயப் பண்புகளில் ஒன்று விருந்தோம்பலாகும். அதிலும், ஆண்மகன் வீட்டில் இல்லாத காலத்தும் மகளிர், நள்ளிரவிலும் விருந்து வந்தால், இன்முகத்துடன் வரவேற்று வகையான உணவுகளைச் சமைத்துக்கொடுத்து உபசரித்த பண்பட்ட நேயத்தினைப் பழந்தமிழ் இலக்கியங்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன.

உணவுகொடுத்தலின் பெருமையை உலகிற்கு உணர்த்துகிறது, இரவு நேரத்தில் வந்த விருந்திற்கு இல்லை என்று சொல்லாது, இருப்பதைக் கொடாது இரவு என்றும் பாராது நெற்றி வியர்க்க நெய்விட்டுச் சமைத்த ஊனோடு கலந்த உணவினை வழங்கிய தலைவியை,

**"எல்லி வந்த நல்இசை விருந்திற்கு,**
**கிளர் இழை அரிவை நெய் துழ்ந்துஅட்ட**
**விளர் ஊன் அம் புகை எறிந்த நெற்றி"[5]**
**(நற்.41:6-8)**

என்ற நற்றிணை அடிகள் காட்டுகின்றன.

மணிமேகலையில் இதனை,

**"மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம்**
**உண்டிக்கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே"4**
**(மணி.11:95-96)**

உண்டிக்கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே என்று மணிமேகலையிலும் விருந்தோம்பல் பண்பு பற்றி எடுத்துரைக்கப்பட்டது.

சாதிக்கின் குடும்பம் பொருளாதார நிலையில் பின்தங்கி இருந்தாலும் விருந்தினருக்கு உணவளிக்க மறக்கவில்லை என்பதை அபிலாஷ் தன்னுடைய நாவலில் தெளிவுபடுத்துகிறார். மனிதனை சகமனிதனாக நினைத்து அவனுக்கு ஒருவேளை உணவளிக்கும் மனிதநேய பண்பு இன்று குறைந்து கொண்டு வருகிறது என்பதை அறிந்து ஆசிரியர் தன்னுடைய நாவலில் சாதிக்கின் குடும்ப பின்னணிமூலம் சமூகத்திற்கு எடுத்துரைக்கின்றார்.

### பிறருக்காக இரங்குதல்

சாதிக்கின் தங்கை பள்ளிக்கூடம் செல்லும் பருவத்தில் உள்ளவள். அவளின் வீட்டிற்கு அருகில் உள்ள ஒருதாய் கைக்குழந்தையுடன் வசித்து வருகிறாள். அவள் அம்மைநோயால் அவதிப்படும் நிலையில் வயதான ஒரு கிழவியின் கவனிப்பில் உள்ளாள். இந்நிலையில் அவளின் குழந்தையை பர்வீன்தான் கவனித்துக் கொள்கிறாள். தாய் அன்போடு அக்குழந்தையை கவனித்துவருகிறாள். பள்ளிக்கூடம் போகும் நேரம் தவிர்த்து மற்றநேரங்களில் அவளைக் கவனிப்பது தான் அவளுக்கு வேலை. இதனை ஆசிரியர் நாவல் வரிகளில் குறிப்பிடுகிறார்.

"பர்வீன் வந்து குழந்தையை வாங்கிக் கொண்டு பக்கத்து வீட்டுக்குப் போனாள். சாதிக் அருகே ஆஸ்பத்திரி ஒன்றும் இல்லை என்றான். மாலையில் உம்மா வந்த போது குழந்தைக்கு மூச்சு மெல்லிதாகத்தான் வந்து கொண்டிருந்தது. வெட்டு நின்றுவிட்டது. ஆனால் ஜீரம் கொதித்தது.'[6] (ர.நா.ப.123)

"ஸ்கூல்ல இன்னிக்கு சத்துணவு போடு வாங்கன்னு காத்திருந்தேன். அதனால்தான் நான் சீக்கிரம் வரேல்ல. எல்லாம் என் தப்பு தான். அவள் தலையை அடித்துக்கொண்டு அழுதாள்."[7] (ர.நா.ப.122)

குழந்தையை கவனித்து வருவதால், எப்போதும் அவளுக்கு குழந்தையை பற்றிய அக்கறை சற்ற அதிகமாக இருந்தது. அன்று அக்குழந்தையை விட்டுவிட்டு பள்ளிக்கூடம் சென்றிருந்தாள். அவள் திரும்பி வந்து பார்க்கும் போது குழந்தைக்கு கடுமையான ஜீரம் அடித்தது. எனவே அவள் குழந்தையைப் பார்த்து இரக்கப்பட்டு அழுகிறாள். குழந்தையை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல அண்ணனிடம் உதவிக்கேட்கிறாள்.

குடும்ப சூழ்நிலை காரணமாக பள்ளிக் கூட உணவை எதிர்ப்பார்த்த பர்வீன் குழந்தையின் இந்நிலையினைக் கண்டு தலையில் அடித்துக் கொண்டு அழுகிறாள். வறுமையில் இருந்தாலும் பர்வீன் உயிர்களிடத்து அன்பு காட்ட தவறவில்லை என்பதை ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

**"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்'**[8]

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வள்ளலார் வாடியதாக குறிப்பிடுகிறார். இக்கருத்தை அபிலாஷ் தன்னுடைய நாவலில் பர்வீன் என்ற கதாபாத்திரத்தின் மூலம் விளக்குகிறார். கைம்மாறு கருதாமல் பர்வீன் அந்தகுழந்தையை தன் குழந்தையைப் போல எண்ணி பார்த்துக் கொண்டாள் என்பதை அறியமுடிகிறது. பெற்ற தாய், தந்தைக்கு உதவாத இந்தகாலத்தில் பிறரின் குழந்தையை நன்றாக பார்த்து கொண்டு அக்குழந்தைக்கு உடம்பு முடியவில்லை என்றவுடன் உள்ளம் பதைக்கிறாள் பர்வீன. இப்போது இந்நிலைக் குறைந்துக் கொண்டு வருகிறது. பிற உயிர்களிடத்து அன்பு காட்ட வேண்டும் என்பதை ஆசிரியர் "பர்வீன்" என்ற கதாபாத்திரத்தின் மூலம் உணர்த்துகிறார்.

### எவ்வுயிரும் தன்னுயிரே

"ரசிகன்" நாவலில் சாதிக் மனிதரை மதித்ததோடு மட்டுமல்லாமல் அஃறிணை உயிர்களிடத்தும் அன்பு காட்டுகிறான். சாதிக் ரஜினி ரசிகர்மன்றத்தில் பணியாற்றுகின்ற போது திரையரங்கிற்கு வெளியே இருக்கும் ஒருநாயிடம் மிகுந்த பரிவுடன் நடந்துக் கொள்கிறான். அஃறிணை உயிருக்கும் வயிறு

இருக்கிறது அதற்கும் பசிக்கும் என்பதை தன்னுடைய நாவல் வரிகளில் ஆசிரியர் காட்டுகிறார்.

"சாதிக் மீண்டும் திரையரங்குக்கு வந்து பால் பாக்கெட் பெட்டியில் மீதமிருந்த ஒரு பாக்கெட்டை எடுத்து வெளியே வந்தான். கூட்டத்துக்கு வெளியே நடந்தான். சற்று தொலைவில் ஒரு குப்பைத்தொட்டி. அதில் ஒரு நாய் எட்டிப்பார்த்து கிளறிக் கொண்டிருந்தது. சாதிக்கைப் பார்த்ததும் அது வாலாட்டியது. அவன் குப்பைத் தொட்டியில் இருந்து ஒரு பிளாஸ்டிக் டப்பாவை எடுத்து கீழே வைத்து அதில் ஒரு பால் பாக்கெட்டைப் பிய்த்து ஊற்றினான். நாய் அவசரமாய் நக்கி தளும்பவிட்டு குடித்தது. குடித்து முடிக்கும்வரை பார்த்துவிட்டு திரும்ப நடந்தான்."[9] *(ர.நா.ப.249)*

திரையரங்கிற்கு வெளியே சாதிக் வழக்கமா சந்திக்கும் நாயைப் பார்க்கிறான். ரஜினி கட்அவுட்டில் ஊற்றிய பால் மீதியிருந்தது. அதை எடுத்துக் கொண்டு போய் வெளியே பசியோடு இருந்த நாய்க்கு ஊற்றி மகிழ்கிறான். அது குடித்து முடிக்கும் வரை அருகில் நின்று விட்டு பின்பு நாயைக் கடந்து செல்கிறான்.

பழந்தமிழர்கள் மரங்கள், விலங்குகள், பறவைகள் மீதும் இரக்கம் கொண்டிருந்தனர். பறவைகளுக்கும் கருணை காட்டினர். பழந்தமிழர்கள் தங்கள் நிலத்தில் விளைந்த விளைச்சலை வீட்டில் சேர்க்கும் காலம் வந்தது. நல்ல வெண்ணெல் விளைந்திருந்தது. அதனை அரிந்து எடுக்க எண்ணிய உழவர்கள் அதில் பறவைகள் கூடுகட்டி வாழும் என்று எண்ணி அதனை களைத்தால் பறவைகள் துயரப்படும் என்று எண்ணி, உழவர்கள் "தண்ணுமை" என்னும் கருவியை முழக்கி இசையை எழுப்பினர் என்ற குறிப்பு நற்றிணையில் உள்ளது.

**"வெண்ணெல் அரிநர்**
**தண்ணுமை வெரீஇ**
**பழனப்பல் புள் இரிய"[10] (நற்.350:1-2)**

என்ற அடிகள் தெரிவிக்கின்றன. இதன் மூலம் நெற்பயிரில் சிறுகுருவிகள் கூடுகட்டி வாழ்ந்திருக்கும். நெல்லை அரிந்தெடுக்கும் போது அக்குருவிகளுக்கு தீங்கு நேரிடும். இசையை முழங்கி ஆரவாரம் செய்தால், அக்குருவிகள் தங்கள் கூட்டத்தோடு வேற்றிடம் பெயரும் என்ற மனிதநேயச் சிந்தனையை உணரமுடிகிறது.

"ரசிகன்" நாவலில் வரும் சாதிக்கும் இது மாதிரியான குணநலன்களைப் பெற்றுள்ளான் என்பதை ஆசிரியர் குறிப்பிடுகிறார். மனிதனை மனிதனாக மதிக்காத இந்த காலத்தில் அஃறிணை உயிராகிய நாய் பசியோடு இருக்கும் என்று எண்ணி, அதற்கு உணவிடும் சாதிக்கின் மனிதநேயம் போற்றுதலுக்குரியது.

பழந்தமிழர்களிடம் இருந்த மனிதநேயச் சிந்தனை இன்றும் சமூகத்தில் வாழும் ஒருசில மனிதர்களிடம் இருந்து கொண்டு தான் இருக்கிறது என்பதற்கு சாதிக் ஒரு உதாரணமாக திகழ்கிறான்.

### சாதிக்கின் ஈகை பண்பு

சாதிக் தன்னுடைய நண்பர்கள் மீது மிகுந்த பாசம் வைத்திருந்தான். பத்திரிக்கையை விட்டு அவன் சென்னையில் ரஜினி ரசிகர் மன்றத்தில் சென்று சேர்ந்தபிறகு தன்னைக் காணவரும் நண்பன் மீது மிகுந்த பாசம் கொள்கிறான். நண்பன் பசியோடு இருப்பான் என்பதை அறிந்து, தன்னுடைய சாப்பாட்டையும் சேர்த்து சாப்பிட சொல்கிறான். நண்பனும் வயிறா சாப்பிடுகிறான். அதை பார்த்து ஆனந்தம் கொள்கிறான். இத்தகைய ஈகை பண்பை ஆசிரியர்,

"வாட்ச்மேன் வந்து சாப்பாட்டு பார்சல் தந்தார். ரெண்டு பிரியாணி இருந்தது. சாதிக் எனக்கு வேணாம். நீ சாப்பிடு என்றான். நான் வேகவேகமாய் வாரி விழுங்குவதை புன்னகையுடன் பார்த்திருந்தவன் சிகரெட்டை தன் இடது கை விரல்களிடையே வைத்து விட்டு வலக்கையால் என் உச்சந்தலையை வருடி விட்டான்."[11] *(ர.நா.ப.255)*

தன்னிடம் பொருள் அளவுக்கு அதிகமாக இருந்தால் தான் பிறருக்குக் கொடுக்கவேண்டும் என்றில்லை. மனம் உவந்து நாம் பிறருக்குக் கொடுக்கும் சின்ன பொருள் கூட ஈகைப் பண்பிற்கான அடையாளம் தான். சாதிக் தன் நண்பன் பசியோடு இருப்பான் என்று எண்ணி ஒரு வேளை சாப்பாட்டை அவனுக்காக விட்டுக்கொடுக்கிறான். தன் நண்பன் வயிறாற சாப்பிடுவதை பார்த்து மகிழ்கிறான் இந்நிகழ்வு சாதிக்கின் ஈகை பண்பை வெளிப்படுத்துகிறது. இதனை திருவள்ளுவர்,

**"ஆற்றுவார் ஆற்றல்பசி ஆற்றல் அப்பசியை**
**மாற்றுவார் ஆற்றலின் பின்"[12]**

**(கு.எ.225)**

தவம் இருப்பவர்கள் நெடுநேரம் தன் பசியைப் பொருட்படுத்தாது பசியைப் பொறுத்தல் வேண்டும். அதற்கு மிகுந்த மன உறுதியும் ஆற்றலும் வேண்டும். அத்தகைய ஆற்றல் போற்றத்தக்கது. ஆனால் அத்தகைய ஆற்றல் ஒருவர் மற்றவரின் பசியை தானத்தினால் போக்கும் ஆற்றலுக்கு அடுத்தப்படியே. ஆக ஈகை நன்று என்கிறார் திருவள்ளுவர்.

பசித்து புசி என்பது பழமொழி. பசித்தும் கூட புசிக்க முடியவில்லை என்பது சமூத்தில் இருக்கும் கொடுமையான நிகழ்வு. ஒருவேளை உணவுக்கு கூட கிடைக்காமல் இருப்பவர்கள் சமூகத்தில் இன்றும் இருந்துக்கொண்டு தான் இருக்கின்றனர். பிறருக்கு உதவுவதற்கு நம்மிடம் பணம் இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. நல்ல குணம் இருந்தால் போதும். இன்று ஈகை பண்பு குறைந்து கொண்டு வருகிறது. இத்தகைய ஈகை பண்பு மக்களிடம் வேண்டும் என்பதற்காக ஆசிரியர் தன்னுடைய நாவலில் சாதிக்கின் கதாபாத் திரம் மூலம் சமூகத்திற்கு உணர்த்துகிறார்.

## தொகுப்புரை

சிறுபத்திரிக்கை மரபைச் சார்ந்த ஒருவன் இன்றுள்ள கேளிக்கை கலாச்சாரத்தில் சிக்கி வாழ்கிறான். அப்படிப்பட்ட சாதிக் வாழ்க்கைச் சூழல் வறுமை நிலையில் காட்டப்பட்டபோதும் அவனும் அவன் குடும்பத்தில் உள்ளவர்களும் மனிதநேயத்துடன் இருந்தார்கள் என்பதை ஆசிரியர் சுட்டுகிறார். வீட்டிற்கு வந்த சாதிக்கின் நண்பனுக்கு விருந்தளிக்கும் பண்பில் பர்வீனின் மனிதநேயம் வெளிப்படுகிறது. தனக்காக வாழும் இந்த உலகில் வேறொரு பெண்ணின் குழந்தைக்காக வாழும் இரக்க குணம் கொண்ட பெண்ணாக சாதிக்கின் தங்கை காட்சிப் படுத்தப்படுகிறாள். பத்திரிக்கைக்காக வாழும் சாதிக் தனக்கென்று பொருள் சேர்த்து வைக்கா விட்டாலும் நல்ல குணங்களை தன்னுள் கொண்டு இருந்தான். ஒருகட்டத்தில் பத்திரிக்கையை விட்டு விலகி ரஜினி ரசிகர் மன்றத்தில் சேர்ந்த சாதிக்கின் வாழ்க்கை அப்போதும் மாறாமல் பிறகுக்கு உதவி செய்யும் குணம் கொண்டவனாக இருந்திருக்கிறான் என்பதை அறிய முடிகிறது. எவ்வுயிரையும் தன்னுயிரைப் போல எண்ணும் சாதிக் ஒரு நாயின் பசியைப் போக்குகிறான். நண்பனுக்காக தன் உணவையும் விட்டுக்கொடுத்து அவன் வயிறாற சாப்பிட வேண்டும் என்று நினைக்கிறான். இத்தகைய மனிதநேயச் சிந்தனை உள்ளவனாக சாதிக் வாழ்க்கை பின்புலம் அமைகிறது என்பதை ஆசிரியர் நாவல் வழி எடுத்துரைக்கிறார்.

## முடிவுரை

விருந்தோம்பல் பண்பு, பிறருக்காக இரங்குதல், எவ்வுயிரும் தன்னுயிரே, ஈகை பண்பு ஆகிய குணநலன்கள் ஒரு மனிதன் சகமனிதனிடம் காட்டும் மனிதநேயப் பண்பாகும். இத்தகைய மனிதநேயப் பண்புகளை ரசிகன் நாவலில் வரும் சாதிக்கின் வாழ்க்கைச் சூழல் வழியாக எடுத்துரைக்கப்பட்டது.

அடிக்குறிப்பு

1. தாயுமானவர் பாடல்கள், பராபரக் கண்ணி - 221, மெய்யப்பன், மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600 001, நான்காம் பதிப்பு - 2004.
2. பாரதியாரின் தேசிய கீதங்கள், விடுதலை - 30, பாரதி பதிப்பகம், 108, உஸ்மான் சாலை, தியாகராய நகர், சென்னை - 600 017.
3. ஆர்.அபிலாஷ், ரசிகன், ப.எண் - 84, முதல் பதிப்பு - டிசம்பர் 2014, உயிர்மை பதிப்பகம், 11 29 சுப்பிரமணியம் தெரு, அபிராமபுரம், சென்னை - 600 018.
4. நற்றிணை மூலமும் உரையும், ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை (உ.ஆ), பா.எ - 41:6-8,சாரதா பதிப்பகம், ஜி - 4, சாந்தி அடுக்ககம், 2 3, ஸ்ரீ கிருஷ்ணா, எட்டாம் பதிப்பு, மார்ச் - 2007.
5. மணிமேகலை மூலமும் உரையும், ந.மு.வேங்கடசாமி நாட்டார், ஔவை சு. துரைசாமிப் பிள்ளை (உ.ஆ), பா.எ - 11:95-96, சாரதா பதிப்பகம், ஜி - 4, சாந்தி அடுக்ககம், 2 3, ஸ்ரீ கிருஷ்ணா, எட்டாம் பதிப்பு, மார்ச் - 2007.
6. ஆர்.அபிலாஷ், ரசிகன், ப.எண் - 123, முதல் பதிப்பு - டிசம்பர் 2014, உயிர்மை பதிப்பகம், 11 29 சுப்பிரமணியம் தெரு, அபிராமபுரம், சென்னை - 600 018.
7. மேலது, ப.எண் - 122.
8. உரைவேந்தர் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, திருவருட்பா மூலமும் உரையும், (ஆறாம் திருமுறை), ப.எ - 62, முதற்பதிப்பு - 2006, கங்கை புத்தக நிலையம், சென்னை.
9. ஆர்.அபிலாஷ், ரசிகன், ப.எண் - 249, முதல் பதிப்பு - டிசம்பர் 2014, உயிர்மை பதிப்பகம், 11 29 சுப்பிரமணியம் தெரு, அபிராமபுரம், சென்னை - 600 018.
10. நற்றிணை மூலமும் உரையும், ஔவை.சு. துரைசாமிப்பிள்ளை (உ.ஆ), பா.எ - 350: 1-2,சாரதா பதிப்பகம், ஜி - 4, சாந்தி அடுக்ககம், 2 3, ஸ்ரீ கிருஷ்ணா, எட்டாம் பதிப்பு, மார்ச் - 2007.
11. ஆர்.அபிலாஷ், ரசிகன், ப.எண் - 255, முதல் பதிப்பு - டிசம்பர் 2014, உயிர்மை பதிப்பகம், 11 29 சுப்பிரமணியம் தெரு, அபிராமபுரம், சென்னை - 600 018.
12. திருக்குறள் நயவுரை, திருக்குறள் நம்பி தங்க.பழமலை (உ.ஆ), கு.எ - 225., ஆறாம்பதிப்பு 2009, அருண்மொழி வெளியீடு, 150, தெற்குத் தெரு, திருக்கோவிலூர் - 605 757.